4. முருகன் வழிபாடு

விநாயகர் அகவலின் தொடர்பாக, விநாயகர் உருவங்களில் முக்கியமான முப்பத்திரண்டு வகைகளை ஆராய்ந்தோம். இதனை அடுத்துச் சித்தர் சுவடிகளில் காண்கிற முருகனுடைய வடிவ வேறுபாடுகளையும் இங்கே பார்ப்பது இயையுடையதாகும்.

சங்க காலத்திற்கு முன்பிருந்தே குறிஞ்சிக் கடவுளான முருகன் தமிழ் மக்களை ஆண்டு வந்திருக்கிறான். மலைமீது கோவில் கொண்டுள்ள முருகன் தமிழர்களின் இதயத்தில் நீங்காத இடங்கொண்டு நிலைபெற்ற கடவுளாகும். தமிழகத்துச் சித்தர்கள் பலர் 'பரமகுரு' என்றும் 'குருநாதன்' என்றும் முருகனை வணங்கி வந்திருக்கிறார்கள்.

முருகனுடைய அருள்பெற்றுக் குமரகுருபரரைப் போல உய்வுநிலை கண்ட ஞானிகளும், முனிவர்களும் பலர் ஆவர். நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படையை நாம் நன்கறிவோம். முருகனைப் பற்றிய குமரகுருபரரின் பாடல்களும், பகழிக்கூத்தர் போன்ற பெரியோர்களின் பாடல்களும் புகழ்பெற்றவை. அவ்வையார் போன்ற தொன்மையான புலவர்களின் வாழ்விலே, முருகப் பெருமான் பல திருவிளையாடல்கள் புரிந்து இருக்கிறான் என்பதும், தமிழ் உலகுக்கு நன்கு தெரிந்த செய்தியே.

முருகனை வழிபடுவதற்குரிய பல நுட்பமான சக்கரங்களையும், மந்திரக் கட்டுக்கோப்புகளையும், தமிழகத்து ஞானிகள் பலர் வழங்கி இருக்கிறார்கள்.

நக்கீரர் காலம் முதலாக, அண்மையில் வாழ்ந்த பாம்பன் சுவாமிகள் வரை, பல ஞானியர்களின் வாழ்விலே முருகன் செய்த அற்புதங்கள் பல. இந்த அற்புதங்களைக் குறித்த செவிவழிச் செய்திகளும் பலவாம். இவை ஒருபுறமிருக்க, முருகனுடைய வழிபாடு தமிழகத்துக்கே உரிய பல தனிச்சட்டங்களோடு நெடுங்காலமாக நமது சித்தர் இலக்கியங்களிலே பயின்று வந்திருக்கின்றது. பழநியிலே கோவில் கொண்டிருக்கும் முருகன் போகர் என்ற சித்தரின் ஆசானும், குருவும், தெய்வமும் ஆவான். இவனுடைய சிலையின் அமைப்புமுறை இன்றளவும் புரிந்துகொள்ள முடியாத ஒரு சித்தரின் மர்ம மருந்துச் சேர்க்கை என்றும், அந்தச் சிலையே 'நவபாசாணம்' என்றும் தமிழ் உலகம் சொல்லி வருகின்றது. அதோடு கூட இந்தக் கோவிலின் ஆற்றல்களைப் போகர் என்ற சித்தரின் ஜீவ சமாதியோடு பிணைத்துக் கூறும் வரலாறுகளும் பலவாக வழங்கி வருகின்றன. இவ்வாறே அருணகிரி நாதரின் வாழ்விலும் முருகனுடைய திருவருள் பல அற்புதங்களை நிகழ்த்தி இருக்கிறது.

சித்தர்களின் ஞானப் பயிற்சியிலே ஈடுபட்டுள்ள தீவிரதரர்கள் பலருடைய கல்விமுறையிலே, முருகனோடு பின்னிப் பிணைந்த பல வழிபாடுகள் இன்றவும் நிலவிவருகின்றன.

மந்திரங்களும் எந்திரங்களும் சக்கரங்களும் தவிர, வேல் ஒன்றையே முருகனாக நிறுவி வழிபடுகிற முறைகளும், சித்தர் இலக்கியங்களிலே இடம்பெறுகின்றன.

உலகத்தின் பகுதிகளைப் புவியியல் முறையிலே பிரித்து இலக்கணம் கூறுகிற பல நூல்கள், முக்கியமாக நம்முடைய நாடி சோதிட ஏடுகள், தமிழ்நாட்டைச் சேய்கண்டம் என்று அழைத்து, தமிழ்நாடு முருகனுடைய நாடு என்றே இலக்கணம் கூறுகின்றன.

முருகனைத் தமிழ்க்கடவுள் என்றே அழைக்கும் மரபும் மிகவும் பழமையானதே.

எந்தக் கடவுளையும், அதாவது எத்தகைய தெய்வ உருவத்தையும், மனமண்டலத்திலேயே பதித்து அருவமாக வழிபடுவதே சித்தர்களுடைய ஆன்ம முறை எனினும், முருகக் கடவுளுக்குப் பற்பல வடிவ நிலைகளைத் தந்து, பூசனை செய்கிற முறைகளையும் சித்தர் இலக்கியம் எடுத்துக் கூறி இருக்கிறது.

'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்' என்பது மக்கள் மொழியாகும். முருகனோ குழந்தையும் தெய்வமும் இரண்டும் ஒன்று சேர்ந்த ஒரு மூர்த்தி. எனவே இந்தக் குழந்தைத் தெய்வத்தைத் தமிழ்மக்கள் தொன்மையான பழங்காலத்திலிருந்தே கொண்டாடி வந்து, இத்தெய்வம் தமிழ்த் தெய்வமாக இடம்பெற்றுவிட்டது.

தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் கூறப்பெறுகிற 'வெறியாட்டு' என்பது வேலனை வேண்டிச்செய்யப்பெற்ற ஒரு பூசனை ஆகும். பெண்ணிற்குப் பிடித்து இருந்த பேய் நீங்குவதற்காகப் பழந்தமிழ் மக்கள், முருகனுக்கு இந்தப் பூசையைச் செய்தார்கள் என்று சொல்லப்படுகிறது. இதனையும், இதுபோன்ற வேறுசில வழிபாடுகளையும் பற்றிச் சித்தர் இலக்கியம் விதிமுறைகளை வகுத்துக் கூறியிருக்கிறது.

முருகனுக்கு நிகழ்த்துகிற வழிபாடுகள் நான்கு வகைப்படும். அவை:
(1) அன்பால் நிகழ்த்தும் வழிபாடு; (2) ஆகம முறைப்படி நிகழ்த்துகிற வழிபாடு; (3) பயன்கருதி நிகழ்த்துகிற வழிபாடு; (4) யாதொரு பயனும் கருதாத ஆன்ம வழிபாடு.

குறிஞ்சிக்கலி போன்ற இலக்கியங்களில் வருகின்ற குறவர்களின் பூசை, அன்புப் பூசையின் இனத்தைச் சார்ந்தது. துடிகொட்டி மணியடித்துச் செய்கிற ஒரு குறவர் பூசை இது. இதனை 'விதியொடு படாத வழிபாடு' எனப் பெரியோர்கள் அழைத்தார்கள். இந்த வழிபாட்டிலே குறவர்கள் பாடுகிற துதிப்பாடல்கள், 'குறிஞ்சி' என்னும் பண்ணிலே பாடப்பெற்றதாகக் குறிப்பு வருகிறது.

திருவேர்கத்தில் அந்தணர்கள் நாற்பத்தெட்டு ஆண்டுகள் பெண்ணாசை இல்லாது விரதம் காத்து, நேரமும் மந்திரமும் வகுத்து,

வழிபாடு செய்வதாகக் கூறப்பெறுகிற பூசனை, விதியொடு பட்ட பூசை எனப் பெயர் பெற்றது. இதுபோலவே திருவாவினன்குடியிலே (பழநி) முனிவர்கள் வழிபட்ட முறையும், விதிமுறைப்படி செய்யப்பெற்ற வழிபாடு ஆகும்.

இந்த இருவகையான பூசனைகளும், பயன்கருதியும், பயன்கருதாமலும் நிகழ்ந்துள்ளன. இவை தவிர, ஒரு குறிப்பிட்ட நோக்கம் நிறைவேறுவதற்கு என்றே, முருகனுக்கு நேர்த்திக் கடன்கள் செய்து, மக்கள் வழிபடுகிற முறைகளையும் விரிவாகக் காண்கிறோம்.

நான்காவது முறையான பயன்கருதா வழிபாடு, முற்றிலும் சித்தர் கல்வியின் பாற்பட்டது. இது 'ஞானப்பூசை' ஆகும்.

முருகனுடைய வழிபாடும், ஈடுபாடும் தமிழ்மக்களிடையே தொன்மைக்காலத்தில் இருந்து, சமுதாய வாழ்வோடு நன்கு கலந்து இருந்த காரணத்தால், சங்கத் தமிழர்கள் தங்களுடைய உண்மைக்கும், உறுதிக்கும் சான்றாக முருகன் மீது ஆணை இடுகிற பழக்கமும் இருந்து வந்துள்ளது.

தீங்குகளை விலக்கக் கூடியவன் முருகனே என்ற நம்பிக்கை, அந்தக் காலத்துத் தமிழர்களுக்கு உறுதியாக உள்ளத்தில் இடம்பெற்று இருந்தது என்பதற்கு, நம் இலக்கியங்களிலே பலநிகழ்ச்சிகள் வருகின்றன. வேங்கை மரத்தடியில கண்ணகி விமானம் ஏறிச் சென்றதைக் கண்ட வேடர்கள், 'இது ஏதோ ஒரு கேட்டின் அறிகுறி' என்று அஞ்சி முருகனுக்கு வழிபாடு செய்து சாந்தி கோரினார்கள் என்று காண்கிறோம்.

பெற்ற பெண்களுக்கு அணங்கு என்னும் பேய்க்கேடு தீண்டிய போது, அதனைத் தீர்த்துக்கொள்ள அன்னைமார்கள் முருகனை வழிபட்டார்கள் என்றும் காண்கிறோம். குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு போன்ற இலக்கியங்களில் இத்தகைய வழிபாடுகளைக் காண்கிறோம்.

பரிபாடலிலே வீடு பேறு வேண்டி மோட்சத்தை நாடி வழிபடுகிற குறிப்பு, அக்காலத்து மக்கள் முருகனுடைய திருவடிக்கீழ் இருத்தல் வேண்டி இயற்றிய வழிபாடுகளுக்குச் சான்று பகர்கிறது.

முருகக் கடவுளின் தொடர்பாக மூன்று வகையான கூத்துக்கள் ஆடப்பெற்ற செய்தியும் இலக்கியங்களிலே பார்க்கிறோம். அவை : (1) வென்றிக் கூத்து: (2) வசைக்கூத்து: (3) வினோதக் கூத்து. இம்மூன்றையும் ஒட்டி முருகன் ஆடிய கூத்துக்களும் விரிவாகக் கூறப்பெறுகின்றன.

1. குடைக்கூத்து

இந்த ஆடல் வென்றிக் கூத்து என்னும் வகையைச் சேர்ந்தது. அவுணரோடு செய்த போரில், முருகன் தன் கையில் உள்ள குடையை முன்புறமாகச் சாய்த்து இந்த வென்றிக் கூத்தை ஆடினான். இதனைச் சிலப்பதிகாரம்,

படைவீழ்த் தவுணர் பையுள் எய்தக்
குடைவீழ்த் தவர்முன் ஆடிய குடையும்

என்று கூறுகிறது.

2. துடிக்கூத்து

துடி கொட்டி ஆடுகிற இந்தக் கூத்து பற்றியும் சிலப்பதிகாரம் பேசுகிறது.

முருகனுடைய போருக்கு ஆற்றாமல், சூரன், வஞ்சனை முறையால் மறைந்து சென்று கடல் நடுவில் மரமாக நின்றான். இந்த வஞ்சனையை அறிந்த முருகன், தன்னுடைய வேலினை வீசிக் கடலும், மலையும், சூரும், பொடியாகும்படி செய்தான். அந்த வெற்றிக் களிப்பிலே கடல் அலைகளையே அரங்கமாகக் கொண்டு, துடிகொட்டி வெற்றிக்கூத்து ஆடினான். இதனை,

நீர்த்திரை அரங்கத்து நிகர்த்து முன்நின்ற
சூர்த்திறம் கடந்தோன் ஆடிய துடியும்

என்று பாடுகிறது சிலப்பதிகாரம்.

3. குரவைக்கூத்து

இந்த ஆடல் முருகனுடைய அடியார்கள் ஆடும் கூத்து ஆகும். இடைச்சியர் கண்ணனை நோக்கி ஆடும் 'ஆய்ச்சியர் குரவை' என்னும் கூத்தைப் போலக் குறமகளிர் ஆகிய மலைப்பெண்கள், முருகனை நோக்கி ஆடுகிற கூத்து, 'குன்றக் குரவை' என்ற அழைக்கப்பெற்றது. இந்த இரண்டு கூத்துக்களையும் பற்றி அடியார்க்கு நல்லார் தமது உரை விளக்கத்திலே குறிப்பிடும் பொழுது, இந்த மக்கள் சில உற்பாதங்களைக் கண்டு தங்கள் சேரிக்குத் தீங்கு வருமோ என்று அஞ்சி, அதற்குச் சாந்தியாக இக்கூத்தை ஆடினார்கள் என்று விளக்குகிறார்.

4. வெறிக்கூத்து

இக்காலத்திலும் சிலர் சாமிவந்து ஆடுவதாகக் கூறுகிற காட்சியை நாம் பார்க்கிறோம். முருகனுக்குக் காவடி எடுக்கும் அடியார்களுக்கும் 'ஆராதனை' வந்து ஆடுவதைப் பாக்கிறோம். இந்த வகையைச் சார்ந்ததே வெறிக்கூத்து என்பது. மனிதர்கள் மீது தெய்வம் ஏறிநின்று ஆடுகிற ஆவேசக் கூத்து என்று இது விளக்கப்படுகிறது. அக்காலத்தில் வேலன் ஆகிய பூசாரி தன் கையிலே வேலை ஏந்தி, செம்பட்டு உடுத்தி, சிவப்புச்சந்தனம் பூசி, தொண்டகம் என்னும் பறை ஒலிக்க ஆடினான் என்று இலக்கியம் பேசுகிறது. இது அக்காலத்து வெறிக்கூத்தின் வகைப்பட்டது. தலைவிக்கு அணங்கு தீண்டியதனால் அதனை வெருட்டுவதற்காகச் செவிலித்தாய் அல்லது நற்றாய் பூசாரி ஆகிய வேலனை வேண்ட, அவன் இக்கூத்தை ஆடினான் என்று பண்டைய இலக்கியம் பகர்கிறது. இவ்வாடலைப் பற்றிய இலக்கணம் தொல்காப்பியத்திலும், புறப்பொருள் வெண்பாமாலை போன்ற நூல்களிலும் கூறப்பெற்றுள்ளது.

5. வள்ளிக்கூத்து

குறத்தி ஒருத்தி வள்ளியின் வேடத்தைப் புனைந்து கொண்டு, இக்கூத்து ஆடினாள் என்று கூறப்பெறுகிறது. இது முருகனை நோக்கி ஆடப்பெறுகிற கூத்து. இதைப் பற்றிய குறிப்பு, தொல்காப்பியம் உள்ளிட்ட பல நூல்களிலே காணப்படுகிறது.

முருகனுடைய பிறப்பு, வரலாறு, சூரன்கதை முதலியன பற்றிய பல செய்திகளையும், சங்க நூல்களில் இருந்து அண்மைக்காலத்து நூல்கள் வரை விரிவாகவே சொல்கின்றன. சங்க நூல்களில் முருகனுக்கிய பல நாமங்கள் வருகின்றன. அவற்றில் முக்கியமானவை பிள்ளையார், சித்தன், சேய், செவ்வேள், முருகன், வேள், நெடுவேள், சேவற்கொடியோன், ஆலமர் செல்வன், சேய் முதலியன.

விநாயகருக்குப் பிள்ளையார் என்ற பெயர் வழங்குவது பலருக்கும் தெரியும். ஆனால் முருகனுக்கும் அக்காலத்தில் பிள்ளையார் என்ற பெயர் வழங்கியதாக அறிகிறோம். நச்சினார்க்கினியர் உரையிலும், வேறு பல குறிப்புகளிலும், சிவனுடைய பிள்ளை என்பதனால் முருகன் பிள்ளையார் என அக்காலத்தில் வழங்கப்பட்டதாக ஒரு குறிப்பு வருகிறது.

சித்தன் என்ற பெயர், முருகன் எல்லா வல்லமைகளும் பொருந்தி, எல்லாம் வல்ல சித்தனாக விளங்குவதால், அக்காலத்து மக்கள் அவனுக்குச் சூட்டிய பெயர் ஆகும். இது காரணம் பற்றியே பழநித்தலத்திற்குச் சித்தன்வாழ்வு என்ற பழம்பெயர், சித்தனாகிய முருகன் வாழகின்ற தலம் என்ற பொருளிலே வழங்கியுள்ளது.

முருகனுடைய சிவப்பு நிறத்தினாலும், அவனுடைய மாறாத என்றும் நிலைத்த இளமையினாலும், அவனுக்குச் சேய் என்றும், சேயோன் என்றும், அக்காலத்தில் பெயரிட்டார்கள்.

வேள் என்ற சொல் வேள்வி, வேட்கை, வேட்டல் முதலான பல பொருள் உள் அடக்கியமையால் யாகத்துக்கும், ஆசைக்கும், மணக்கோலத்திற்கும் உரியவனான முருகன், வேள் என்று அழைக்கப்பெற்றான். வேலை ஏந்தி நிற்பதால் வேலன் என்ற பெயரும், ஆறுமுகங்கள் கொண்டதால் அறுமுகவன் என்ற பெயரும், மலையில் நிற்பதால் சிலம்பன் என்ற பெயரும், சிவப்பு நிறமானவன் என்பதால் சேந்தன் என்ற பெயரும், உப்பூரிக்குடிகிழார் மகனாய் உருத்திர சன்மனாய்த் தோன்றியதால் செட்டி என்ற பெயரும், மலைக்குகையில் வதிவதாலும், உள்ளமாகிய இரகசிய அகத்தில் குடிகொண்டு இருப்பதாலும், குகன் என்ற பெயரும், நீண்ட நெடுங்காலமாக முருகனுக்கு வழங்கிவருகின்றன.

இளைஞனாகவும், வெற்றி வீரனாகவும் விளங்கி வருகின்ற முருகப் பெருமானுக்கு, ஆறுபடை வீடுகள் என்று தமிழ்மக்கள் வகுத்துக் கூறி உள்ளார்கள். சித்தர் இலக்கியங்களிலே ஆறு ஆதார நிலைகளைப் போன்று இந்த ஆறு படைவீடுகளைப் பற்றிய குறிப்பு காணப்பெறுகிறது. அகவுலகில் உள்ள ஆறு படைவீடுகளைப் போலவே, வெளி உலகில் அமைந்த முருகனுடைய ஆறு படை வீடுகள் வருமாறு:

1. திருப்பரங்குன்றம்

முருகன் இங்கே கடம்ப மரத்தின் அடியில் வீற்றிருப்பதாகச் சங்க நூல்களிலும் சிலப்பதிகாரத்திலும் காண்கிறோம்.

2. திருச்சீரலைவாய்

திருச்செந்தூர் என்று அழைக்கப்பெறும் கடற்கரைத்தலம் இதுவே. இங்கே முருகன் ஒரு திருமுகமும், நான்கு கைகளும் கொண்டு, கிழக்கு நோக்கியவாறு, நின்ற திருக்கோலத்திலே காட்சி தருகிறான். சங்க நூல்களிலும், சிலப்பதிகாரத்திலும், மிகவும் முக்கியமாகத் திருமுருகாற்றுப்படையிலும், இந்தத் தலத்தைப் பற்றிய தெளிவான ஓவியத்தைக் காண்கிறோம். கந்தமாதன பருவதத்தைக் குடைந்து இது கட்டப்பெற்றதாகத் தொன்மை இலக்கியம் பேசுகிறது.

3. திருவாவினன்குடி

பழநி என்று அழைக்கப்பெறும் தலம் இதுவே. கோலேந்திய ஆண்டி, நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறான். 'பொதினி' என்றும், 'சித்தன் வாழ்வு' என்றும் இத்தலத்திற்குப் பழம்பெயர்.

4.. திருவேரகம்

கும்பகோணத்திற்கு அருகே உள்ள சுவாமிமலை என்னும் தலத்திற்குப் பழைய பெயர் திருவேரகம். இங்கும் முருகன் தண்டபாணியாகவே, கோல்தாங்கிய கையோடு, நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறான்.

5. பழமுதிர்சோலை

இதுவே அழகர் மலை என்பது. இதற்குக் கள்ளழகர் கோவில் என்றும் ஒரு பெயர் வழங்கிவருகிறது.

6. குன்றங்கள்

நெல்லை மாவட்டத்தில் உள்ள திருமலையும், சிவகிரி, மயிலம், திருத்தணி, வள்ளிமலை போன்ற எல்லா முருகன் குன்றுகளும், இலங்கையில் உள்ள கதிர்காமம், நல்லூர், முதலிய தளங்களும் குன்றுதோறாடல் என்ற பிரிவில் அடங்கும்.

இந்தப் படைவீடுகள் ஆறோடு சேர்த்து, ஏழாவது இடமாக எண்ண வேண்டிய இடம், தமிழ் மக்களின் உள்ளமாகும். அந்த உள்ளத்திலே கோவில் கொண்ட மூர்த்திக்குக் கோவில்களும் பல. வடிவங்களும் பலவாம்.

விநாயகப் பெருமானுக்கு முப்பத்திரண்டு வடிவங்களை வகுத்துக் கூறியுள்ள பெரியோர்கள், முருகப் பெருமானுக்குப் பதினாறு முக்கியமான வடிவங்களை இயம்பி உள்ளார்கள். வடமொழியில் 'குமார தந்திரம்' 'ஸ்ரீதத்துவநிதி' முதலிய நூல்களில், முருகனுடைய வடிவங்கள் விரிவாகக் கூறப்பெற்றிருப்பதைப் போலவே, சித்தர்கள் பதினாறு முக்கிய நிலைகளை முருகனுக்கு வகுத்துக் கூறியுள்ளார்கள்.

இந்தப் பதினாறு வடிவங்களுக்கும், பதினாறு வெவ்வேறு பெயர்கள் தந்து, இந்த் வடிவங்களின் அமைப்புகளையும் பதினாறு வகையான சிற்பங்களாக நமது சித்தர்கள் பேசுகிறார்கள். இவற்றுக்குரிய யந்திரங்களும், மந்திர அமைப்பு கட்டுக்கோப்புக்களும், வெவ்வேறாகவே தரப்பெற்றுள்ளன.

ஞானிகள் வகுத்துள்ள முருகனுடைய பதினாறு வடிவ வேறுபாடுகள் வருமாறு :

1. சக்திதரர் அல்லது வேலன்

முருகனுடைய இந்த உருவம் ஒருமுகம் கொண்டது. கைகள் இரண்டு. அடைக்கலம் தருகிற கைதவிர, மற்றொன்றிலே வேல் தாங்கி நிற்கிறான், இந்தப் பெருமான். இவனுக்கு நான்கு கைகள் இருப்பதாகவும் சில சுவடிகள் இலக்கணம் கூறுகின்றன.

2. கந்தன் அல்லது தண்டபாணி அல்லது தண்டாயுதபாணி

முருகனுடைய இந்த உருவமே பழநியாண்டியின் திருவுருவமாகும். சித்தர் இலக்கியத்தில் இந்த மூர்த்தி வகிக்கின்ற இடம் மகத்தானது.

இவருக்கு முகம் ஒன்றே. கைகள் இரண்டு. ஒரு கையில் தண்டம் என்கிற கோல் தாங்கி நிற்கிறார். மற்றொரு கை வளைந்து இடுப்பைத் தொட்டுக்கொண்டு இருக்கின்றது. இவருடைய ஆடை கோவணமே. குறுகிய இடுப்புடன் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார், ஆண்டவன் என்றும் ஆண்டி என்றும் அழைக்கப்பெறுகிற இந்த முருகக்கடவுள் தனிமையில் நிற்கிற இந்த ஆண்டியே பழநியாண்டி.

இதே வடிவத்திற்கு ஓவிய முறையிலே நிறம் சொல்லப்பெற்றிருக்கிறது. செந்தாமரை மலரின் நிறத்தோடு கூடிய ஆண்டவன் என்றும், பெரியோர்கள் இந்த மூர்த்தியை வணங்குகிறார்கள். இந்த நிறம் முருகனுடைய வேறு பல வடிவங்களுக்கும் உரியதாகச் சுவடிகள் கூறுகின்றன. இதையொட்டியே, அண்மைக் காலத்தில் வாழ்ந்து மறைந்த ஒரு பெரிய சித்தர் ஆகிய தூத்துக்குடி சுப்பராய சுவாமிகள் என்ற ஞானி, தாம் இயற்றிய கிளிக்கண்ணியில் கீழ்கண்டவாறு பாடுகிறார். இந்த கிளிக்கண்ணி மதுரை மாரியப்ப சுவாமிகளால் தமிழ் உலகிலே நன்கு பரப்பப்பெற்று, வேறு பல இசைக்கலைஞர்களும் மேடைகளிலும், இசைத்தட்டுகளிலும், வானொலியிலும் பாடிப் புகழ்பெற்ற கண்ணி ஆகும்.

எங்கும் நிறைந்திருப்போன்
எட்டியும் எட்டா திருப்போன்
குங்கும வர்ணனடி -கிளியே
குமரப் பெருமானடி!

இந்தக் கிளிக்கண்ணியிலே வருகிற குங்கும வர்ணமும் இந்த நிறத்தையே குறிக்கின்றது.

இந்த முருகனுக்குச் சில சுவடிகள் நான்கு கைகள் தந்து பேசுகின்றன.

3. படைத்தலைவன், வீரக்கடவுள் அல்லது தேவசேனாபதி

இந்த வடிவத்திற்கு முகங்கள் ஆறு. இவனையே அறுமுகவன் என்றும், ஆறுமுகக் கடவுள் என்றும், சண்முகப் பெருமான் என்றும், இன்னும் பல பெயர்களிலும் பெரியோர்கள் அழைக்கிறார்கள். திருச்செந்தூரில் உள்ள சண்முக விலாசம் இங்கே நினைவு கூரத்தக்கது.

ஆறுமுகங்களுக்கு ஏற்ப, இந்த வடிவத்திற்குக் கைகள் பன்னிரண்டு. இவனுடைய தேவி தாமரை தாங்கி இருப்பதாகவும், அவளை இந்த மூர்த்தி தமது தொடையின் மீது அமர்த்தியவாறு காட்சி தருவதாவும், சில ஞான நூல்கள் வருணிக்கின்றன. பன்னிரண்டு கைகளுக்கும் சிற்சில மாறுபாடுகளுடன் அணிகலன்களும், படைக்கலங்களும் கூறப்பெற்றுள்ளன.

4. சுப்பிரமணியன் அல்லது செவ்வேள்

சித்தர் இலக்கியத்தில் இந்த மூர்த்திக்குத் தருகிற கோலமும் வடநூலார் தருகிற கோலமும் ஒன்றாகவே உள்ளன. இவருடைய நிறம் குங்குமச் சிவப்பு. முகம் முழுநிலா போன்றது. கைகள் நான்கு. இவர் அணிந்துள்ள ஆடை செம்பட்டாகும்.

5. ஆனை இவர்வோன் அல்லது கஜவாகனன்

இந்த முருகனை ஆனைப்பாகன் என்றும், ஆனைமீது அமர்ந்த அருஞ்சேய் என்றும் அழைக்கிறார்கள். இவருடைய வாகனம் வீறு கொண்ட யானை. முகம் ஒன்று. கைகள் நான்கு. வலக்கைகளில் ஒன்று குக்குடம். மற்றொன்று வரதம், இடக்கைகளில் ஒன்று சக்தி, மற்றொன்று அபயம்.

திருச்செந்தூர் போன்ற மாபெரும் கோவில்களிலே முருகனை ஆனைவாகனத்தில் எழுந்தருளப் பண்ணுவது என்னும் எழுந்திருத்து முறையும், இதையொட்டி எழுந்த சடங்கே ஆகும்.

6. ஆறெழுத்தோன், ஆறெழுத்துக் கடவுள் அல்லது சரவணபவன்

இந்த மூர்த்திக்கு முகங்கள் ஆறு. கைகள் பன்னிரண்டு. கண்களும் பன்னிரண்டு.

சில பழைய சுவடிகளிலே சரவணபவன் என்ற இந்த மூர்த்திக்கு ஒரே முகம் என்றும், கைகள் ஆறு என்றும், கண்கள் மூன்று என்றும் கூறப்பட்டுள்ளது. சில வடமொழி நூல்கள் இந்த மூர்த்திக்குரிய வாகனம் சிங்கம் என்று பேசுகின்றன.

7. கிருத்திகைக் கடவுள் அல்லது கார்த்திகேயன்

முருகனுடைய வரலாற்றில், கிருத்திகை மாதர் என்னும் ஆறு தாய்மார்களும் முக்கிய இடம் பெருகிறார்கள் அல்லவா? எனவே கிருத்திகை மாதரால் வளர்க்கப்பெற்ற குமரப்பெருமான் ஆகிய

கார்த்திகேயனுக்கு, இந்த வரலாற்றையொட்டியே ஆறுமுகங்கள் கூறப் பெறுகின்றன. தோள்கள் ஆறு, கைகள் ஆறு, இந்தப் பெருமானுடைய நிறம், நண்பகற்காலத்துக் கதிரவனின் ஒளிநிறம் என்று ஞானிகள் இலக்கணம் கூறுகிறார்கள். சில வடமொழி நூல்களிலே கார்த்திகேய மூர்த்திக்கு ஒரு முகமும், மூன்று கண்களும், பத்து கைகளும் இருப்பதாக இலக்கணம் கூறப்பெற்றிருக்கிறது. இந்தப் பெருமானுடைய வாகனம் மயில்.

8. சேயோன் அல்லது குமாரர்

முருகனுடைய இந்த வடிவம் இல்லறத்தோர்கள் பலரும் பூசனை செய்வதற்குரிய இலக்கணத்தோடு, பெரியோர்களால் வருணிக்கப் பெற்றுள்ளது. அமைதியும், ஆனந்தமும், இல்லற நலங்களும், அருளக் கூடிய பெருமான் என்று, ஞானிகள் இந்த மூர்த்தியைப் பொது மக்களுக்கு வருணித்துக் கூறி இருக்கிறார்கள். இவருடைய முகம் ஒன்று. கைகள் நான்கு. இவரே வள்ளியை மணம் புரிந்த மணவாளர் ஆவார்.

சில வடமொழி நூல்கள் இந்த மூர்த்திக்குக் குழத்தை வடிவு தந்து கூறுகின்றன.

9. மயில்வாகன அறுமுகவர் அல்லது மயிலேறும் பெருமாள்

மயில் ஏறு என்றும், மயிலேறிய மைந்தன் என்றும், தோகைவாகன் என்றும் அழைக்கப்பெறுகிற இந்த முருகன், சண்முகக் கடவுளின் வடிவத்தில் மற்றொரு உருவ வேறுபாடு. ஆறுமுகங்களும், பன்னிரண்டு கைகளும், பன்னிரண்டு கண்களும், குங்கும நிறத்தில் மயில் வாகனத்தில் காட்சி தரும் இந்த ஆறுமுகக் கடவுளுக்கு, சயை விசயை என்று இரண்டு தேவியர்கள் இருபுறமும் நிற்பதாகச் சில சுவடிகளில் காண்கிறோம்.

10. தாரகாரி

இந்த மூர்த்தி கோடி சூரியர்களின் ஒளியைக் கொண்டவர் என்றும், இவருடைய வாகனம் யானை என்றும், கண்கள் மூன்று என்றும் , கைகள் ஆறு என்றும் நூல்கள் கூறும். சில நூல்கள் பன்னிரண்டு கைகள் என்றும் கூறும்.

11. சேனானி

இந்த மூர்த்தியைப் பற்றிய குறிப்பு ஒரு சில நூல்களில் மட்டுமே காணக்கிடைக்கிறது. இவருக்கு முகங்கள் ஆறு. கண்கள் பன்னிரண்டு . கைகள் பன்னிரண்டு;

12. பிரமசாஸ்தா

இவருக்கு முகம் ஒன்று. கண்கள் இரண்டு. இவர் காட்சி தருவது வள்ளியுடன்.

13. வள்ளிநாயகர் அல்லது வள்ளி கல்யாண சுந்தரர்

வள்ளியப்பன் என்ற பெயரிலே பரவலாகக் காணப்பெறுகிற இந்த மூர்த்தி, வள்ளிதேவியோடு திருமணக் கோலத்திலே காட்சி தருகிறார்.

14. குழந்தைசுவாமி அல்லது பாலசுவாமி

இவருக்கு இரண்டு கைகள். ஒரே முகம்.

15. குன்றுருவிய வேலர் அல்லது கிரவுஞ்ச பேதனர்

இவருக்கு முகங்கள் ஆறு. கைகள் எட்டு.

சில நூல்களில் ஒரு முகமும், மூன்று கண்களும் சொல்லப்பெற்றுள்ளன. சில நூல்கள் இரண்டு கைகளிலும் வேல்கொண்டு, கிரவுஞ்ச மலையைத் துளைக்கின்ற கோலத்தில், இந்த மூர்த்தியைச் சித்திரிக்கின்றன.

16. தோகையோன் அல்லது சிகிவாகனர்

இந்த வடிவத்தில் பல வேறுபாடுகள் காண்கிறோம். ஒரு முகத்திலும், ஆறு முகத்திலும் ஏழு வகையான கோலங்கள் கூறப்பெற்றுள்ளன.

இந்தப்பதினாறு வகையான வடிவங்களைத் தவிர சில ஞானிகள் அக்கினிஜாதர், சௌரபேயர், காங்கேயர், குகர், பிரம்மசாரி, தேசிகர் என மேலும் ஆறு வடிவங்களைப் பற்றிக் கூறுகின்றனர்.

இந்த ஆறிலும் தேசிகர் என்ற வடிவம் குருநாதன் என்றும், குருபரன் என்றும் பல நூல்களிலே வர்ணிக்கப்பெறுகின்றது. சில நூல்கள் இந்த வடிவத்தை நாடகப் பண்போடு விளக்கம் செய்கின்றன. இதுவே சிவனுக்குப் பிரணவ உபதேசம் செய்த குருநாதனின் வடிவமாகும்.

தகப்பன்சாமி என்றும், தந்தைக்கு உபதேசித்த தனயன் என்றும் கூறப்பெறுகிற இந்த குருநாதன் ஒரு முகமும், ஆறு கைகளும் கொண்ட சின்முத்திரைக் கடவுள். இவருக்கு எதிரில் ஒரு மாணவனைப் போன்று தந்தை சிவனார் கைகட்டி நிற்க, குருநாதன் அவருக்குப் பிரணவத்தை உபதேசித்து அருள்கிறான். பல ஓவியர்கள் இந்த நிலையில் நிற்கும் குருபரனை, வண்ண வண்ண வடிவங்களிலே சித்திரித்திருக்கிறார்கள்.

முருகக் கடவுளின் வடிவங்களைப் பற்றிக் கூறுகிற ஞானியர்கள் முருகனுடைய இரண்டு தேவியர்களையும் பற்றிச் சுவையான இலக்கணங்களையும் பலவாறாகக் கூறி மகிழ்ந்து இருக்கிறார்கள்.

முருகனுடைய தேவியர் இருவருக்கும் இந்த வருணனைகளிலே அதிக வேறுபாடு இல்லை. வள்ளிக்கு முகம் ஒன்று. தெய்வானைக்கும் முகம் ஒன்றே. இருவருக்கும் கைகள் இரண்டே. இருவர் நிற்கும் நிலைகள் வருமாறு:

வள்ளி வலப்பக்கம். அவளுடைய கைகளிலே தாமரை. அவளுடைய நிறம் கறுப்பு.

தெய்வானை கருங்குவளை ஏந்திய கையோடு இடப்பக்கம் காட்சி தருகிறார்.

சில நூல்களிலே இந்த வர்ணனை மேலும் சில சுவையான செய்திகளைத் தருகின்றது. கருநிறம் கொண்ட வள்ளி வலக்காலை நேராக ஊன்றி, இடக்காலை வளைத்துக் காட்சி தருகிறார். இடக்கையில் தாமரை தாங்கி வலக்கையைத் தொங்கவிட்டு இருக்கிறார். தெய்வானையின் நிறம் நல்ல சிவப்பு. இடக்காலை ஊன்றி வலக்காலை வளைத்து, வலக்கையில் கருங்குவளை ஏந்தி, இடக்கையைத் தொங்கவிட்டிருக்கிறார்.

சித்தர் இலக்கியத்தில் இந்த வடிவங்களின் உறுப்புக்களுக்கும் கோலங்களுக்கும் உட்பொருள் கூறப்பட்டுள்ளது.

ஆறுமுகங்கள் நான்கு திசைகளையும், வானத்தையும், கீழ் நிலத்தையும் குறிப்பதாகவும், இது எங்கும் நிறைந்த பரம்பொருட் தன்மையின் உருவகம் என்றும் ஞானிகள் சொல்கிறார்கள். அதோடு சிவப்பு நிறம் வீரத்தைக் குறிப்பதாகும். வள்ளியின் மேனி கருணையை உணர்த்துவது ஆகவும், தெய்வானையின் மேனி ஆற்றலை அறிவிப்பது ஆகவும் சில ஞானிகளின் விளக்கம் கூறுகின்றது. முருகனுடைய இளமை ஞான ஆற்றலின் தன்மையையும், வேல் என்னும் ஆயுதம் மும்மலங்களை அழிக்கும் ஆற்றலையும் குறிக்கின்றன.

சித்தர்கள் கூறுகிற இன்னொரு உருவகம் மயிலை அழகின் உருவகம் என்றும், மலையை ஆன்ம ஆற்றலின் உயர்வு என்று உணர்த்துகிறது. இந்த உருவகத்தினால்தான் ஆன்மப் பயிற்சியில் ஈடுபடும் மாணவர்களுக்கு, ஓங்கார வடிவமான விநாயகரைப் போலவே, ஞானகுருவின் வடிவமான முருகப்பெருமானும் வழிபாடு தெய்வமாக விளங்கி வருகிறார். அதோடுகூட, விநாயகர் பிரணவத்தின் வடிவம் என்பதாலும், முருகன் பிரணவத்தை உபதேசிக்கிற குருவின் வடிவம் என்பதாலும், சித்தர் இலக்கியத்தில் இந்த இரண்டு கடவுட் கொள்கைகளும் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன.

★ ★ ★

5. சித்தர் இலக்கியம் உணர்த்தும் ஞானக் கல்வி

விநாயகர் அகவலில் துதிகளினூடே பொதிந்து தரப்பட்டுள்ள யோக ஞானப் பயிற்சி முறைகளை, மேலும் நன்கு புரிந்துகொள்வதற்கும், இவற்றை அநுபவத்தில் கொண்டுவருவதற்கும் பயன்படக்கூடிய முக்கியமான நூல்கள் மூன்று உண்டு. அவை,

சிவானந்த போதம்,
நிஜானந்த போதம்,
நெஞ்சறி விளக்கம்

ஆகிய மூன்றுமாம்.

இந்த மூன்று நூல்களும் எப்போது தோன்றின, யாரால் இயற்றப்பெற்றன என்பவை குறித்த ஆராய்ச்சிக்குரிய செய்திகள் முழுவடிவில், ஐயந்திரிபறக் காணப்படவில்லை. இந்தச் சான்றுகள் ஒருபுறம் இருக்க, இவை எப்போது தோன்றிய நூல்களாக இருப்பினும், பழம் பெரும் சித்தர் இலக்கியத்திற்கு இவை நன்கு துணைசெய்கிற மூன்று ஞான விளக்குகளாகச் சுடர்கின்றன. எனவே இவற்றின் உட்கிடைகளை இங்கே பார்ப்பது பயன்தருவதாகும்.

1. சிவானந்த போதம்

காப்பு

சிவானந்த போதமாஞ் சித்திமுத்தி தந்து
பவானந்த மானவினை பாழாம் - நவானந்த
ஈசனே தானாகும் என்வடிவுத் தாளிணையைப்
பாசமுடன் முன்றொழுவான் பார் 1

தியாகரருள் போதஞ் சிவசந் தரன் சொல்
தயாபரியென் றாய்வடிவந் தானும் - செயாவெனவே
பொய்யா வினாயகனும் பொற்குருவாஞ் சண்முகனும்
அய்யாவு மென்னுள்ளே யாம் 2

முத்திபெறு மென்னெஞ்சு மூர்க்கருட னேயிணங்கிச்
சித்தந் ததும்பிச் சிதறாமல் - முத்தனாம்
பட்டினத்தார் சாட்சி பகுத்தறித லிந்நூலைத்
தொட்டவர்க்கு முண்டாஞ் சுகம் 3

பணியுறுத்த லாகப் பரபோகங் கொண்டு
துணிவுறுத்த நெஞ்சுக்குச் சொல்லின் - அணியாய்ப்
படபடென்னும் நெஞ்சம் பகரு சிவா னந்தத்
திடமுறுவார் தாமே சிவம். 4

சிங்கா தனமுடைய செல்வ அடியார்கள்
தங்காமற் சிரமேற் றரித்திட்டேன் - பொன்காலை
ஏற்றிப் புகழ்ந்தன்பா லிந்நூலென் புன்கவியால்
சாற்றத் துணிந்தேன் சரண் 5

நூற்பயன்

அறிவதனை மனங்கேட்கச் சிவானந்த
போதததை அறிய நன்றாய்
நெறியுடைய முத்தர்கள் தன் திருவடியிற்
பணியவருள் நிலைக்கக் காட்டிக்
குறியுடனே அனுபவித்து வழியடைந்து
கதிபெறவே கூற வென்றும்
பிரிவறவே வாழ்ந்துசிவப் பேரானந்
தம்பெருகப் பேசு மிந்நூல். 6

துதிகள்

மாணிக்க வாசக சுவாமிகள் துதி

நிறைந்தபரி பூரணமாய் நிர்க்குணமாய்
நிர்மலமாய் நித்த னாகித்
துறந்தமன முடையோர்க்குந் துரியனுமா
யதீ தனுமாயச் சோதி யாகிக்
கறந்தமுலைப் பாலாகிப் பாலிலுள்ள
ருசிகாட்டுங் கர்த்த னாகிச்
சிறந்தகுரு மாணிக்கச் சுவாமிகளை
யெம்முளத்திற் றொழுதல் செய்வாம். 7

சமயாசாரியர் மூவர் துதி

இசைக்குருகிப் பரந்தானே யெழுந்தருளி
வேண்டியதோ ரின்பந் தந்து
மிசைக்குளவா யெதிர்த்தவரை மதித்திடாச்
சிவசமய மேலாய்ச் செய்து
திசைக்குளவோர் புகழ்ந்தேத்தச் சிவாலயத்திற்
றேவாரஞ் சிறக்க வோதிப்
பசைக்கருதி யருள்பெருகு மூவரினை
மலரடியிற் பணிகின் றேனே. 8

பசவண்ணர், அல்லமாப் பிரபு துதி

பத்திநிலை தவறாமல் கிருபையுமே
வழுவாமற் பாரின் மீதே
உத்திசிவ கணேசருக்குப் போதமுற்றுப்
பூசைசெய்தே யுகந்து ஞானத்

தத்துவமே யுணர்ந்தசிவந் தானாகும்
பசவண்ணர் சாட்சாத் கார
முத்திதரும் அல்லமாப் பிரபீச
ரிருவர்தாள் முடிக்கொள் வோமே. 9

மருத்துமலைத் தேசிகர் துதி

பன்னுமறை சாத்திரங்கள் ஆகமங்கள்
விரிந்தநூற் பலத்திற் சென்றே
உன்னுகின்ற மனத்தாலே பிறப்பிறப்பாம்
நோய்பலவற் றுற்றி டாமற்
பொன்னுடைய அம்பலவர் கழல்பணியச்
சிந்தையுற்றுப் பூசை செய்ய
என்னதென்றே எனையாண்ட மருத்துமலைத்
தேசிகன்றாள் இறைஞ்சு வோமே. 10

நூல்

இந்த நூல் ஒரு வாக்குவாதத்துடன் தொடங்குகிறது. தொடர்ந்து வரும் பாடல்கள் அறிவுக்கும் மனத்திற்கும் ஒரு தர்க்கம் நடப்பதாக நாடகப் பாங்கிலே இயற்றப் பெற்றுள்ளன.

தோற்றத்தில் வருகின்ற இந்த நாடகம் நீண்டு சென்று ஆன்மா தலையிடுகிற பகுதி வருகிறது.

அறிவு கூறுதல்

ஆன நெஞ்சமே! இமைப்பொழு தாகிலும்
அலைவறுத் திருந்தாயோ?
போன நாளிலே நடந்தது மிருந்ததும்
புதுமைக ளறியாயோ?
ஈன மாகிய கவலையை நீக்கியைம்
பொறியினி லிணங்காமல்
தான மொத்துநான் சொல்மொழி கேட்டுநீ
சரியென்று மகிழ்வாயே.

மனம் கேட்டல்

"ஏதேது! விபரீதமாய் இருக்கிறதே! இமைப்பொழுதாகிலும் பிரியாமலிருந்த நீ இப்போதென்ன அன்னியமாகக் குறித்துச் சொற்படி கேட்கச் சொன்னதும் சந்தோஷமாயிற்று! ஆகிலும், உதவியான காரியமாக இருப்பிற் கேட்க வேண்டுந்தானே! ஆதலாற் சொல்க" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

முத்திபெறும் அழகான நெஞ்சகமே; பணியறுத்தல்
மொழியக் கேள்நீ:
சத்துசித்தா னந்தபரா பரமேநற் கதியென்றுஞ்
சார்ந்தி டாமல்

முத்தர்களும் ஓதிவைத்த நூலதனை யாராய
முனைந்தி டாமற்
பத்திநிலை நில்லாமற் சிந்தனையு மோயாமற்
பார்ப்ப தென்னோ?

மனம் கேட்டல்

"ஆயின், யாதோ பரத்தைச் சாரவில்லையெனவும் , நூலினுட் பொருளையறிந்து முனைகொள்ளவில்லை யெனவும், பத்திநிலையில நிற்கவில்லையெனவும், சிந்தனைகளை அறுக்கவில்லையெனவும் சொல்கிறவற்றை எக்காலத்திலும் யானறியாதவனாய் இருக்கிறேன். இஃதந்தரங்கப் பாஷையாய் இருக்கின்றது. மாடு, மக்கள், பெண்டிர், சுற்றம், வாழ்நாள் முதலியனவே பொருளென்று உன்னியிருந்த எனக்கிப்போது திடீரென்று நான்கு வகையில் நீ சிந்திக்கச் சொன்னாய். ஸ்பஷ்டமாகப் புலப்படுமாறு புகல்க" என்று மனங்கேட்க, அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்

மாடும் மக்களும் சுற்றமும் பெண்டிரும் மாளிகை யுடன்வாழ்வும்

நாடு ராச்சிய மாண்டிடும் புகழ்ச்சியும் நமவென்றே தேகத்தின்
ஊடு சென்றுநீ எனதுடல் யானென வுழன்றலுத் திடுநெஞ்சே!
வீடு விட்டுயி ரேகிடும் போதினில் வினைவழி நுழைந்தாயே

மனம் கேட்டல்

"தேகத்தினுள்ளே புகுந்து, மாடு, மக்கள், சுற்றம், பெண்டிர், உயர்வாழ்வு, தேசாதிபத்தியம் புகழ்ச்சி முதலியவை சதமென்று தேகம் நான், எனது, என்று பாராட்டி உழலுகிறாயென்றும், முடிவு காலத்தில் வினைவழியிலே உயிரை நுழைக்கிறாயென்றுஞ் சொல்கிறாய். நீ இதுகாறும் கூட இருந்தாயா, இல்லையா? இதுகாறும் யாதும் புகலாதிருந்த வாறென்ன? இப்போது இங்ஙனஞ் சொல்லுதற்குக் காரணமென்ன?" என்று மனங்கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

கேணீ நெஞ்சமே! உன்னிள வயதிலே கிடந்துலைந்
தனைமுன்னாள்
வீணி லேபல சேனமு மெடுத்ததின் நீமெலிந் திடும்போதே
ஊணி லேனெனை யானறி யாமலே யுத்தமர் நோக்கத்தாற்
காணு மிப்படி மானிட தேகமுங் கண்டதும் அறிவாயே

மனம் கேட்டல்

"அனேகம் தேகத்திற் பிரிந்து பிறந்திறக்கின்றதாகவுஞ் சொன்னாய்; அவற்றுள் இம்மானிடதேகம் அருமையாகப் பெரியோர் கிருபா நோக்கத்தாற் கிடைத்ததாகவுஞ் சொன்னாய்; அது தெரியும் படிக்குச் சொல்" என மனம், கேட்க அறிவு கூறுகின்றது: